**பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகிறது.

நிதிக்கூற்றுகளில் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு

அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிதியத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 95 | (i) ஊழியர் சேமலாப நிதியத்தின் உதவு தொகை செலுத்துபவர் ஒருவரின் வரவில் உள்ள மொத்த தொகை, அவரது கணக்கு முடிவுறுத்தப்பட்ட திகதியிலி- | ஊழியர் சேமலாப நிதியத்தில் விடுவிக்கும் பத்திரங்கள் பல்கலைக்கழக ஆணைக்குழு-விடம் கிடைக்கப்பெறுகையில் | நிதியத்தின் உதவு தொகை செலுத்து-பவர் ஒருவர் கணக்குகளை முடிவுறுத்திய பின்னர் அவருக்கு |

| | | | |
|---|---|---|---|
| ஆவது பிரிவு | ருந்து 03 மாத காலப் பகுதிக்குள் அவருக்கு செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், அவருக்கு செலுத்தப்பட வேண்டிய மாதத்திற்கு மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள மாதத்தின் இறுதி திகதி வரை அவரது கணக்கில் வரவில் உள்ள மொத்த தொகை சேர்க்கப்பட்டு அவரிடம் செலுத்தப்படல் வேண்டும். ஆயினும், சேவை முடிவுறுத்தப்பட்டு நலன்களை செலுத்துவதற்காக உதவு-தொகை பெறுநரின் தாமதம் அல்லது உயர் கல்வி நிறுவனங்களின் தாமதம் காரணமாக 03 மாதங்கள் தொடக்கம் 420 மாதங்கள் வரை தாமதமாகியுள்ள 36 சந்தர்ப்பங்களின் பொருட்டு ரூபா.626,716 ஆன வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது | ஏற்படும் தாமதம் பொருட்டு உதவுதொகை பெறுநர் பொறுப்புகூற வேண்டிய அவசியம் ஏற்படாத சந்தர்ப்-பங்களில், குறித்த தாமதம் பொருட்டான தாமத வட்டி சம்பந்தப்பட்ட அலுவலரிடம் அறவிடல் வேண்டும். அதேபோன்று சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் தாமத வட்டி அறவிடல் தொடர்பாக அந்தந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். ஊழியர் சேமலாப நிதியத்தின் செலுத்தல் பத்திர-ங்களை அனுப்பி வைக்கும்போது ஏற்படும் தாமதங்களை தவிர்த்-துக்கொள்வதற்கு ஏற்புடைய-தாக 2022 ஆம் ஆண்டு பெப்ருவரி 07 ஆம் திகதிய 2022/03 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. | உரியதான நலன்-களை செலுத்தல் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 95 ஆவது பிரிவு பிரகாரம் மேற் கொள்ளுதல் வேண்டும். |
| | (ii) தாமதம் உதவு தொகை செலுத்துபவரின் தாமதத்தால் ஏற்பட்டிருப்பின், அந்தக் காலப்பகுதிக்கு வட்டி செலுத்தல் மேற்கொள்ள வேண்டியதில்லை என்றாலும், நலன்கள் செலுத்தும்போது, 01 மாதம் தொடக்கம் 408 மாதங்கள் வரையிலான காலப்பகுதி தாமதமாகியிருந்த 10 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அந்தக் காலப் பகுதிக்காக ரூபா .74,201 ஆன வட்டி சம்பந்தப்பட்ட உதவு தொகை செலுத்துநர்களிடம் வழங்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட அலுவலரிட-மிருந்து தாமத வட்டி அறவிடல் தொடர்பாக அந்தந்த பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். இது தொடர்பாக பல்கலைக்கழக துணைவே-ந்தர்களின் அபிப்பிராயம் யாதெனில், இந்த தாமதத்திற்கு காரணம் அலுவலர்களின் தவறு மட்டுமல்ல தகவல் வழங்குதல் மற்றும் திட்டுவதற்கு காலம் எடுத்தல் என்பதாகும். அதன்படி ஊழியர் சேமலாப நிதிய கொடுப்பனவு பத்திரிக்கைகளை அனுப்புகை-யில் ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்கு ஏற்புடையதாக 2022 ஆம் | நிதியத்தின் உதவு தொகை செலுத்து-பவர் ஒருவர் கணக்-குகளை முடிவுறுத்-திய பின்னர் அவரு-க்கு உரியதான நலன்களை செலுத்-தல் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்-கழக சட்டத்தில் 95 ஆவது பிரிவு பிரகா-ரம் மேற்கொள்-ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆண்டு பெப்ருவரி 07 ஆம் திகதிய 2022/03 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை வெளியிடப்பட்-டுள்ளது. | |
| **(ஆ)** | 1982 ஆம் ஆண்டு பெப்ருவரி 02 ஆம் திகதிய 155 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை | உதவுதொகை பெறுநர் சேவையை முடிவுறுத்தி நலன்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்ட பின்னர் 02 மாத காலப் பகுதிக்குள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், உரிய காலப் பகுதிக்குள் சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தால் பல்கலைக்கழகத்திடம் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 02 மாதங்கள் தொடக்கம் 36 மாதங்கள் வரை தாமதமாகியிருந்த 35 சந்தர்ப்பங்கள் பொருட்டு ரூபா.546,862 ஆன வட்டியும் உதவுதொகை செலுத்துநரிடம் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது ஊழியர் சேமலாப நிதியத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் மேலும் முறைசார்படுத்தி 2022/03 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. | புதிய சுற்றுநிருபம் பிரகாரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்று பின்னாய்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.மில்லியன் 4,225.0 ஆன இலாபம் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் இலாபம் ரூபா.மில்லியன் 4,062.5 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.மில்லியன் 162.5 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முதலீட்டு வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் செல்நெறிகளின் பகுப்பாய்வு

மீளாய்விற்கான ஆண்டில் முதலீட்டு வருமானம் ரூபா.மில்லியன் 4,932.1 ஐ முன்னரான ஆண்டின் முதலீட்டு வருமானமான ரூபா.மில்லியன் 4,740.00 உடன் ஒப்பிடுகையில் ரூபா.மில்லியன் 192.1 அதாவது 4.1% ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஆண்டில் மேற்கொண்டிருந்த முதலீட்டு அதிகரிப்பு காரணமாக அந்த முதலீடுகளுக்கான வட்டி வருமானம் அதிகரித்தல் பிரதானமாக இந்த நிலைமைக்கு காரணமாகியது.